# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

[கட்டுரைத் தொகுப்பு]


பதிப்பாசிரியர்

முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்

முனைவர் ஏ. கோதண்டராமன்



அகல் பதிப்பகம்



பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி [கட்டுரைத் தொகுப்பு]



அகல் பதிப்பகம்

ISBN 9 788198 977472

விலை : ரூ.

பக்தி இலக்கியங்களில்

# தமிழ் வளர்ச்சி

(கட்டுரைத் தொகுப்பு)

பதிப்பாசிரியர்
முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்
முனைவர் ஏ. கோதண்டராமன்
இணைப் பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
தமிழ்த்துறை,
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல் – 2),
மீனம்பாக்கம், சென்னை – 600 061.

அகில் பதிப்பகம்
சென்னை

18. சைவ வைணவத்தில் அறிவியல் சிந்தனைகள்
- **ச.இராதாகிருஷ்ணன்** ........................................ 134

19. திருமந்திரத்தில் காணலாகும் உடல் மீதான கருத்தாக்கங்கள்
- **முனைவர் ச. பிரபாகரன்** ........................................ 144

20. தமிழ் வளர்ச்சியில் ஐரோப்பியரின் பங்களிப்பு
- **முனைவர் மோ.கிறிஸ்டி** ........................................ 149

21. வள்ளலாரின் இறைவழிபாடும், தமிழ்ப்பணியும்
- **முனைவர் ம. அருள்தாஸ்** ........................................ 157

22. இசுலாமிய பக்தி இலக்கியத் தமிழ் வளர்ச்சியில் மாலைகள் - பல்சந்தமும் மிகுராசு மாலையும் - **முனைவர் பா. மொய்தீன் ஆரிப்** ............ 163

23. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் தமிழ்ப் பயன்பாடு
- **முனைவர் மு. காமராஜ்** ........................................ 169

24. ஞானத்தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் **முனைவர் கி. அன்பு** ......... 174

25. இஸ்லாமிய தமிழ் இலக்கிய முன்னேற்றத்தில் இஸ்லாமிய இலக்கிய கழக மாநாடுகளின் பங்களிப்பு -**முனைவர் மு.முஹம்மது ரஃபீக்** 183

26. சைவ இலக்கியங்கள் - **எஸ்.கலா** ........................................ 192

27. மக்களின் செல்வாக்கைப் பெற்றதா? கந்தபுராணம்
- **முனைவர் பொன் சண்முகம்** ........................................ 199

28. நம்மாழ்வாரின் நான்மறைகள் **முனைவர் த. ராதிகா லட்சுமி** ...... 204

29. சைவ இலக்கியமும் தமிழ் வளர்ச்சியும் - **பா. மோகனா** ................ 211

30. ஆண்டாளின் இறையும் இலக்கியப்பணியும் - **அ. நித்தியபாலா** .... 216

31. பெரியபுராணமும் இறைச் சிந்தனைகளும்
- **திருமதி. மு.கார்த்திகா** ........................................ 223

32. தமிழ் காப்பியங்களில் பௌத்தம் - **சே. செண்பகம்** .................... 231

33. இரட்சணிய யாத்திரிகத்தில் தற்குறிப்பேற்ற அணி
- **அ.அருண்குமார்** ........................................ 239

34. அருள்மிகு மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும்
- **முனைவர் மு. இராதா** ........................................ 247

35. சைவம் வெளிப்படுத்தும் இறையன்பு
- **முனைவர் கே.எஸ்.பிரணதார்த்திஹரன்** ........................................ 254

36. சைவ சமயமும் சிவ வடிவங்களும் - **முனைவர் கி. அன்பு** ............ 260

37. சிவவாக்கியரின் இறை வழிபாட்டுச் சிந்தனை
- **முனைவர் மு. முஸ்தபா** ........................................ 271



38. வைணவ இலக்கியங்களில் அகப்பொருள் மரபுகள்
- **முனைவர் கே.சி.ஆர். ஷிஜி** ........................................ 276

39. திருமங்கையாழ்வாரின் பாடல்களில் இலக்கிய வடிவங்கள்
- **முனைவர் கி. அன்பு** ........................................ 282

40. திருவள்ளுவரும் கடவுள் கோட்பாடும் - **ந. திருமால்** .................. 292

41. இசுலாமிய நாட்டுப்புறப் பாடல்களில் பக்தியின் விழுமியங்கள்
- **முனைவர் சா. இன்குலாப்** ........................................ 299

42. ஆண்டாளும் திருப்பாவையும் - **முனைவர் சு. தீபா** ...................... 306

43. ஆயர் வழிபாடுமுறைகள் - **முனைவர் ம. காயத்ரி** ......................... 312

44. சித்தர் இலக்கியங்களில் பக்தி நெறி **முனைவர் மு. முஸ்தபா** ........ 318

45. அப்பாண்டைநாதர் உலாவில் காணலாகும் பக்தி
- **முனைவர் து.பத்மமாலதி** ........................................ 322

46. முத்தித்தராயன் கோயில் வரலாறும் அமைப்பும்
- **ம. இராஜகணபதி** ........................................ 331

47. குடகர்களின் பக்தி நெறி - **மு. கோகிலா** ........................................ 338

48. பக்தி இலக்கியங்களில் வேளாண்மை - **முனைவர் வெ.பரிமளம்** .... 344

49. பௌத்தம் வளர்த்த தமிழ் - **முனைவர் வே. லீலாவதி** ................. 350

50. தமிழ் வளர்ச்சியில் தேவாரத்தின் பங்கு
- **முனைவர் ஆ. சிவனருட்செல்வி** ........................................ 359

51. திருவாசகம் திருப்பொற்சுண்ணம் - **முனைவர் அரு.அபிராமி** ........ 364

52. வைரமுத்துப் படைப்புகளில் சமுதாயம் - **வெ. கவிதா** ................... 368

53. ஆண்டாள் உணர்த்திய வாழ்வியலும் - பண்பாடும்
- **முனைவர் ஜா. மாலா** ........................................ 383

54. குழிஇருசாயி வழிபாடு - **இ தினேஷ்** ........................................ 389

55. சைவம் வளர்த்த தமிழ் - **முனைவர் சு. செல்வக்குமார்** ............... 398

56. ஆண்டாள் பாசுரங்களில் பக்தி நெறி - **வே. பிரவீனா** .................. 404

57. திருப்பாவையில் குறிப்புப் பொருள்கள்
- **முனைவர் ச. இரா.செம்மலர்** ........................................ 413

58. சைவ சமய குரவர்கள் - **கு. தீபரதி** ........................................ 420

59. சித்தர் இலக்கியங்களில் பக்தி நெறி - **திருமதி. கோ. ஹேமலதா** .... 429

60. நாட்டார் தெய்வங்கள் **முனைவர் வ. மோகனப் பிரியா** ................ 434

61. இமாம் அல்-அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் கல்வி மற்றும் சமூக சேவைகள்:ஒரு பன்முகப் பார்வை. - **Mr. Mohamed Ali** ............ 439

மாலை எனும் வகையில், இசுலாமியத் தமிழிலக்கியங்கள் பெரும்பாலானவை இசுலாமிய மார்க்கத்துடன் தொடர்புடைய, ஏதாவது ஒரு வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்து வருகிறது. இசுலாமிய மார்க்கம் முறையான வரலாற்றைத் தன்னகத்துப் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகும்.

**அடிக்குறிப்புகள் :**

1. பாடல் - 08.,பக்கம் 68.
2. பக்கம் 121.
3. அல் குர்ஆன் - 17:1

**பார்வை நூல்கள் :**


1. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு
   ம. முகம்மது உவைஸ், பீ.மு.அ.அஜ்மல் கான்
   பதிப்புத்துறை, காமராசர் பல்கலைக்கழகம்,
   மதுரை - 625021.
2. மறுவிலா முழுமதி நபிகள் நாயகம் (ஸல்) வரலாறு
   இஸ்லாமிய நூல்கள் மலிவுப் பதிப்பு
   பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்
   மண்ணடி, சென்னை - 600001.
3. திருக்குர்ஆன் தர்ஜுமா தமிழ் மொழிபெயர்ப்பு
   இஸ்லாமிய நூல்கள் மலிவுப் பதிப்பு
   பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்
   மண்ணடி, சென்னை - 600001.




# நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் தமிழ்ப் பயன்பாடு


**முனைவர் மு. காமராஜ்**
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001


**முன்னுரை**

உலகில் தொன்மையான மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். மொழி என்பது ஒரு மனிதனின் உள்ளத்தினை பிற மனிதனுக்கு அறிவிக்கும் பயன்பாட்டுக் கருவி. மொழியானது மக்களின் பயன்பாட்டினால் நிலை பெறும். அவ்வகையில் பயன்பாட்டுப் பார்வையில் துறைதோறும் தமிழ்ப் பயன்பாடு ஆராயப்படுவதினால் தமிழின் பயன்பாடு அறியப்படுகிறது. அவ்வகையில் நாலாயிர திவ்விய பிரபந்தம் குறித்த பயன்பாட்டுத் தமிழ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்தியாவில் இரு பெரும் சமயங்களில் வைணவம் ஒன்றாகும் நாராயணனை முழுமுதற்கடவுளாக வணங்கும் சமயம் வைணவம், வைணவ வேதம் நாலாயிர திவ்விய பிரபந்தம் ஆகும். அவை அக்காலம் முதல் தற்காலம் வரை வழிபாட்டு மற்றும் இலக்கியம் என்ற முறையிலும் பயன்படுகிறது

**ஆழ்வார் பாசுரங்கள்**

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியையும் பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியையும் பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியையும் திருப்பாணாழ்வார் அமலனாதி பிரானையையும் திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதியையும் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைத் திருப்பள்ளி எழுச்சியையும் குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியையும், பெரியாழ்வார் பெரியாழ்வார் திருமொழியையும் ஆண்டாள் நாச்சியார் திருமொழி, திருப்பாவையையும்

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி, திருகுறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடலையையும், நம்மாழ்வார் திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழியையும் மதுரகவியாழ்வார் கண்ணி நுண்சிறுத்தாம்பூவையும் இயற்றினர். மேற்கண்ட இவை ஆழ்வார்கள் பாசுரங்களாகும். பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்களைத் தொகுத்தளித்த ஆச்சாரியர் நாதமுனிகள் ஆவார்.

**வைணவ சமயம்**

பண்டைய காலத்தில் சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, முருகன் வழிபாடு மற்றும் கொற்றவை வழிபாடு யாவும் தமிழரின் பொது வழிபாடாய் இருந்தது. கி.பி 2ஆம் நூற்றாண்டு முதல் அரசியல் மாற்றம் காரணமாக சமண ஆதிக்கத்தால் தமிழர் வழிபாடுகள் மறைந்தன. கி.பி 6-ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் தொடங்கி 9-ஆம் நூற்றாண்டு வரை சைவ வைணவ சமயங்கள் மறுமலர்ச்சி அடைந்தன. 10ஆம் நூற்றாண்டில் சைவ வைணவ சமயங்கள் பிரிவுற்றன. சைவ வைணவ நெறிகள் தோன்றின. இராமானுசர் விசிட்டாதுவைதம் என்ற வைணவ நெறிய உண்டாக்கி வைணவத்தை இந்தியா முழுவதிலும் பரப்பினார். வைணவ சமய வளர்ச்சிக்கு ஆழ்வார் பாசுரங்கள் வகை செய்தன. அத்தகைய வகையில் அக்காலத்தில் சமய புத்துயிர்க்கும் சமய சித்தாந்தத்திற்கும் பாசுரங்கள் பயன்படுத்தப்பட்டன.

**பாசுரம் சேவித்தல்**

திவ்விய பிரபந்தம் தோன்றிய காலம் தொட்டு வைணவத் திருத்தலங்களில் பாசுரம் சேவிக்க அரசர் நிதியால் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. ‘‘முதலாம் இராசேந்திரனுடைய 19-ஆம் ஆண்டு (கி.பி 1031) உத்திரமேரூரில் (1470) குழிநிலத்திலிருந்து வரும் வருவாயைக் கொண்டு நாள்தோறும் இரண்டு காலங்களிலும் திருவாய்மொழியை மூவர் விண்ணப்பம் செய்ய வேண்டுமென்ற நிபந்தம்’’ (நம்மாழ்வார். டு144). அரசர்களுக்கு அடுத்து நாதமுனிகள் பிரபந்தத்தை தொகுத்த பிறகு பிரபந்தத்தை ஓதப் பெற வேண்டிய காலத்தை நிர்ணயித்தார். ‘‘நின்று போயிருந்த திருமொழி, திருவாய்மொழித் திருவிழாவை நடத்தி வைத்ததும்



அன்றி, ஏகாதசி திதிக்கு முன்பு பிரதமை நாள் முதல் பகல் பத்து என்று பெயர் வைத்து அந்நாட்களில் முதலாயிரத்தையும் ஏதும்படியும் பின் 10 நாளாகிய இராபத்தில் ஒவ்வொரு நாளும் திருவாய்மொழியினை ஒரு பத்து ஓதி மறுநாள் இயற்பாவை ஓதும்படி செய்தார். (இயற்பா சாத்து முறைக்கு மறுநாள் திருப்பல்லா தொடக்கம் அதன் பிறகே இல்லங்களில் இந்நூல் ஓதுவது மர பெருமாள் தைலாகாப்பு சாத்திக் கொள்ளும் கார்த்தியை திருகார்த்திகை தொடங்கி அத்தியன விழாத் தொடக்கம் வரை ஓதாமல் விடப்பட்ட காலம்" (நம்மாழ்வார், பக்.220) இவ்வாறாக நாலாயிர திவ்விய பிரபந்த சேவித்தல் மரபு தொடர்கிறது.

**வைணவ வழிபாட்டுமொழி**

இன்றைய காலத்திலும் பாகவதர்கள் நாலாயிர திவ்விய பிரபந்ததை வீடுதோறும் கொண்டு சேர்க்கும் பணி நடந்து வருகிறது. கிராம பசனை குழுக்களும் பிரபந்த பாசுரங்களைப் பயன்படுத்துகின்றனர். வைணவ திருத்தலங்கள் மற்றும் தற்கால திருத்தலங்களிலும் உற்சவ காலங்களிலும் ஆரத்தி காட்டும் போதும் பிரபந்த பாசுரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மார்கழி மாதம் முழுவதும் விடியற்காலையில் திருப்பாவை மூலம் வழிபடப்படுகிறது. திருமணம் கைகூட கன்னிப்பெண்கள் நாச்சியார் திருமொழி சேவிப்பதால் திருமணம் நடக்கும் என்று நம்பப்படுகிறது. நாலாயிர திவ்விய பிரபந்தம் இந்தியாவிலுள்ள அனைத்து வைணவர்களாலும் அறியப்படுகிறது. பிரபந்தத்தில் திருவாய்மொழி’ தெலுங்கு எழுத்திலும் வெளியிட்டுள்ளனர் (திருவாய்மொழித் திறன், பக்.5 ) அவரவர் மனதிற்கினிய பாசுரங்களை பக்தர்கள் வழிபாட்டிற்கு பயன்படுத்துகின்றனர்.

நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் நம்மாழ்வார் பாசுரங்கள் மதிப்பு வாய்ந்ததாகும். நாதமுனிகளின் காதில் கேட்ட பாசுரம் திருவாய்மொழி, இதன் காரணமாக நாலாயிர திவ்விய பிரபந்தத்தை தேடித் தொகுத்தார். ஆசாரியர்கள் ஆறாயிரம்படி, ஒன்பதினாயிரம்படி, பன்னீராயிரம்படி, இருபத்து நாலாயிரம்படி, முப்பத்துநாலாயிரம்படி என இவற்றில் இருபத்து நாலாயிரம்படி தவிர அனைத்தும் திருவாய்மொழி உரைகள் ஆகும். வைணவர்கள் அதிகமாகச் சேவிப்பது திருவாய்மொழி இதன் சிறப்பறிந்து நம்மாழ்வார் பாசுரங்களைத் திராவிட வேதம் என்பர்.

**நவீனத் தமிழ்ப் பயன்பாடு**

இன்றைய கால நவீன தொழிற்நுட்பத்தால் உலகெங்கும் பக்தி இலக்கியங்கள் வீடுதோறும் சென்றடையும் விதம் செய்யலாம். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைத் தினசரி பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், இணையம் போன்ற ஊடகங்கள் வாயிலாக உலகெங்கும் உள்ள தமிழருக்கும் பிற மொழியினருக்கும் பயன்பெறச் செய்யலாம். பழங்காலந்தொட்டு இலக்கியங்கள் வாயிலாக நாம் நம் முன்னோர் அறிவினைப் பெற்றோம். அவை கற்றோருக்கு மட்டுமே சாத்தியமாய் அமைந்தன. ஆனால் இன்றைய ஊடகம் பிரபந்ததை அறியவும் கேட்கவும் பயிலவும் வகை செய்கிறது. தினசரி பத்திரிக்கையில் ஆன்மீக மலரில் பாசுரங்கள் வெளிவருகிறது. இணையத்தில் யூ-டியூப் திரை வலைத்தளத்தில் நாலாயிர திவ்விய பிரபந்த பாசுரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இணையம் வழியாகவும் பிரபந்த பாசுரங்கள் பதிவிறக்கம் செய்யும் வகை செய்யப்பட்டுள்ளது.

நாலாயிர திவ்விய பிரபந்தம் தோன்றிய காலத்தில் வைணவ சமய மறுமலர்ச்சிக்கு வழிவகைச் செய்தது. நாதமுனி (கி.பி -10) காலத்தில் வைணவ சித்தாந்த தோற்றத்திற்கும் பிரபந்த உரை தோற்றத்திற்காகவும் பக்தி இலக்கியத்திற்குப் பிறகு இலக்கிய மறு வளர்ச்சிக்கும் திருத்தல புராணத் தோற்றத்திற்கும் பயன்பட்டது. பின்பு வைணவ சமய சாத்திரமான நாலாயிர திவ்ய பிரபந்தம் அச்சுப் பதிப்பின் போது பதவுரை செய்து ஆய்வு செய்யப்பெற்றது. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் தொடங்கி தற்காலம் வரை இலக்கிய ஆராய்ச்சிகளுக்கு மேற்கோளாகவும் வைணவ சமய சொற்பொழிவுகள் இலக்கிய சொற்பொழிவுகளுக்கும் பயன்படுத்தப் படுகின்றன. பிரபந்தங்கள் பிறமொழி வைணவரும் பிற நாட்டில் வாழும் வைணவரும் தமிழரும் இறைவழிபாட்டிற்கும் ஆராய்ச்சிக்கும் பயன்படுத்துகின்றனர். மேற்கண்டவற்றிற்கு மேலாக தமிழரிடையே ஒப்பு உயர்வற்ற இலக்கியமாக நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் பயணிக்கின்றது.

**நிறைவுரை**

உலகெங்கும் தமிழ் பரந்து விரிந்து வேறூன்றித் தழைத்து செம்மாந்து நிற்கிறது இன்றைய இளைய தலைமுறையினர்



ஒருபக்கம் பல்வேறு தகவல் தொழில் நுட்பத்தில் மூழ்கிப் போயிருந்தாலும் மறுபக்கம் அதன் வாயிலாகத் தமிழ்ப் பயன்பாடுகளாக கவிதை, கதை, பாடல், கட்டுரை, சொற்பொழிவு, பல்சுவை துணுக்குகள் போன்ற எண்ணற்ற தமிழ்ப் பயன்பாட்டினை நிகழ்த்திக் கொண்டேதான் இருக்கிறார்கள். நவீன வழிமுறைகள் அனைத்திலும் பக்திப் பாசுரங்களிலும் தமிழ்ப் பயன்பாட்டின் வளர்ச்சி இன்னுமின்னும் மிளிர வழிவகை செய்வது நம் அனைவரின் கடமையாகும்.